# நீங்கள் உண்ணுவது ஹலால்தானா ?

## அளவிலா அருளாளன் நிகரிலா அன்புடையோன் அல்லாஹ்வின் திருப்பெயரால்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஹராமில் வளர்ந்த உடல் சொர்க்கம் புக முடியாது, அதற்கு நரகமே ஏற்ற இடமாகும்
**நூல் : முஸ்னது அகமத்,**
உணவு மற்றும் ஏனைய பயன்பாடுகளில் ஹராமான எதுவும் இருந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்துவரும் நாம் அதற்காக பல்வேறு முயற்சிகளைச்செய்து வருகிறோம். ஹராமானவழியில் பொருளீட்டுவதைத் தவிர்த்தல், இறைச்சிவகைகளை இஸ்லாமிய முறைப்படி அறுக்கப்பட்டவையோ என உறுதி செய்தல்போன்றவை, நமது இறைநம்பிக்கையை – ஈமானை – பாதுகாப்பதற்காக நாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளாகும். ஆக, ஹாலால்–ஹராம் என்பதை பொருளீட்டுவது மற்றும் பிராணிகளை அறுக்கும் முறைகளில் மட்டும் கவனத்தில் கொள்கிறோம். ஆனால் ஹலால் – ஹராம் என்பது இதற்கு அப்பாலும் விரிவடைந்து செல்கின்றது. நமது ஒவ்வொரு அசைவிலும் ஒவ்வொரு பயன்பாட்டிலும் அவை இணைந்துள்ளன.

உணவுப் பொருட்களில் கலப்படம் ஏதும் இருந்துவிடக்கூடாது, அது உடல் நலனுக்குத் தீங்கானது என்பதில்நாம் மிகுந்த கவனத்துடன் இருந்துவருகிறோம். ஆனால் நாம் அன்றாடம் பயன்படுத்திவரும் உணவுப்பொருட்கள், மருந்து வகைகள் மற்றும் அழகுசாதனப் பொருட்களில் நாம் நினைத்துப்பார்க்க முடியாத விதங்களிலெல்லாம் நமது உடல்நலனுக்கும் இறை நம்பிக்கைக்கும் கேடுவிளைவிக்கும் ஹராமான பொருட்கள் கலக்கப்படுகின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா?

Pure Veg - உயர்தர சைவம் என்ற பெயரிலான உணவகங்கள் என்றால் அதில் உள்ள அனைத்தும் ஹலால் தான் என்று நாமே முடிவு செய்து கொள்கிறோம். ஆனால் அவற்றில் உள்ள பல்வேறு உணவு வகைகளில் ஹலால் அல்லாத பொருட்களை அவர்கள் அறிந்தும் அறியாமலும் கலந்து விடுகின்றனர் என்பது உங்களுக்குத் தெரியுமா?

இந்த உணவங்களில் ஐஸ்கிரீம், இனிப்புவகைகள் மற்றும் அனைத்து வகை உணவுகளிலும் நிறம் கூட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் பொருட்கள் பெரும்பாலும் ஹரமானவையே என்பது உங்களுக்குத் தெரியுமா?

நாம் சிக்கன் உண்பதாக இருந்தால் அவை அல்லாஹ்வின் பெயர் கூறி அறுக்கப்பட்டதா என்பதை உறுதி செய்து கொள்கிறோம். ஆனால் அதில் நிறம் கூட்டுறவதற்காக கலக்கப்படும் சிக்கன் பவுடர்களில் ஹரமான பொருட்கள் உள்ளன என்பது உங்களுக்குத் தெரியுமா?

மளிகைக் கடைகளில் நாம் வாங்கும் மசாலாப் பொருட்களில் கூட இவ்விதமான ஆபத்துகள் மறைந்துள்ளன. அதுமட்டுமல்ல, நாம் அன்றாடம் நாம் பயன்படுத்திவரும் சோப் வகைகள், பற்பசைகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் லிப்ஸ்டிக் ஆகியவற்றிலும் ஹலால் அல்லாத பொருட்கள் கலந்துள்ளன.

Pure Veg - என்பதைப் போன்றே நாம் ஆயுர்வேத, சித்தவைத்திய மருந்துகளில் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளோம். அவை முற்றிலும் இயற்கையானது, ஹராமான எதுவும் கலந்திருக்காது என்று தான் நாம் நம்பிக்கொண்டிருக்கின்றோம். ஆனால் நமது நம்பிக்கையை முற்றிலும் தகர்க்கும் விதமாக அவற்றில் ஹலால் அல்லாத பொருட்கள் கலந்துள்ளன என்பது உங்களுக்குத் தெரியுமா?

அவ்வாறே பிரபல நிறுவனங்களின் பிஸ்கட், கேக், சிப்ஸ் வகைகள் மற்றும் குளிர்பானங்களின் நிலையும் சந்தேகத்திற்கிடமானதுதான். அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள Pure Veg என்பது அவை ஹலால் என்பதற்கான சான்றிதழ் அல்ல.

இவையனைத்தும் முஸ்லிம்களுக்கு மட்டுமான பிரச்சனை அல்ல. மாறாக, முஸ்லிமல்லாதோரின் மத நம்பிக்கையைத் தகர்க்கும் ஏராளமான அம்சங்களும் இவற்றில் உள்ளன. ஏனெனில், நாம் இங்கு ஹலால் அல்லாத பொருட்கள் என குறிப்பிடுவது முறையாக அறுக்கப்படாத மாடுகள், மற்றும் பன்றியின் கொழுப்பிலிருந்து தயாரிக்கப்படும் பொருள்களையாகும்.

மேற்கண்ட அனைத்திலும் ஹராமான பொருட்கள் கலந்துள்ளன என்றால் அதிலிருந்து நம்மைத் தற்காத்துக் கொள்வதற்கான வழிதான் என்ன? ஒன்று, நாம் அந்தப்பொருட்களில் எதையும் பயன்படுத்தாமல் இருப்பது, அல்லது ஹலால் என்று நம்பகத்தன்மைமிக்க சான்றிதழ் வழங்கப்பட்ட பொருள்களைப் பயன்படுத்துவது.

இவற்றில் மேற்கண்ட பொருட்களை முற்றிலுமாகப் புறக்கணிப்பது. சாத்தியமற்றதாகும் எனவே நம்பகத்தன்மைமிக்க ஹலால் சான்றிதழ்கள் வழங்கப்பட்ட பொருள்களைப் பயன்படுத்துவதே நம்மிடமுள்ள ஒரேவழியாகும். இந்த சேவையில் நீங்களும் பங்கேற்கும் விதமாக நீங்கள் ஒரு பயனீட்டாளர் (Consumer) என்ற உரிமையில் கடைகள், Shopping Centreகளில் பிஸ்கட், சாக்லேட், மென்பானங்கள் (Cool Drinks) போன்ற உணவுப்பொருட்கள், இறைச்சி வகைகள், அழகுசாதனப் பொருட்கள், மருந்து வகைகள் ஆகியவற்றை வாங்கும்போது இதில் Halal India Pvt. Ltd.ன் ஹலால் சின்னம் பொறிக்கப்படவில்லையே, நாங்கள் இதை எப்படி உபயோகிக்க முடியும்? என்பது போன்ற விழிப்புணர்வுக் கேள்விகளைக் கேட்பதன் வழியே அவை பரிசீலிக்கப்பட்டு, விரைவில் ஹலால் சான்றிதழ் பெறுவதற்கும் அதன் வழியே நீங்களும் ஹலாலான பொருட்களைப் பெறுவதற்கும் வழிசெய்யலாம்.

## Halal India Pvt. Ltd. ஓர் அறிமுகம்

நாங்கள் Halal India Pvt. Ltd. எனும் இந்திய அரசு அங்கீகாரம்பெற்ற ஓர் நிறுவனத்தை இந்தியாவில் தொடங்கியுள்ளோம். அது இந்தியாவில் தயாரிக்கப்படும் அனைத்துவகையான உணவுப்பொருட்கள், இறைச்சி வகைகள், அழகுசாதனப் பொருட்கள், மருந்து வகைகள் போன்ற தயாரிப்புகளை பரிசீலித்து, அவற்றுக்கு சட்டப்பூர்வமான ஹலால் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கையே மேற்கொண்டுள்ளது.

உலகின் பல நாடுகளில் ஹலால் சின்னம் பொறிக்கப்பட்ட பொருட்களை மட்டுமே முஸ்லிம்கள் உபயோகிக்கின்றனர், ஹலால் சின்னம் பொறிக்கப்படாத பொருட்களை முஸ்லிம்கள் முற்றிலுமாகப் புறக்கணித்துவிடுகின்றனர் என்பது நடைமுறையாகும். ஆனால் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் நாடுகளில் இரண்டாம் இடம் வகிக்கும் இந்தியாவில் இதற்கான விழிப்புணர்வு முற்றிலும் இல்லை; எனவே இந்திய முஸ்லிம்கள் தாம் உபயோகிப்பது ஹலால்தான் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள இயலாத சூழ்நிலையில் இருப்பதைத் தவிர்க்கும் விதமாகவே Halal India Pvt. Ltd. எனும் நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது.

இது இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும், தலைசிறந்த முஸ்லிம் அறிஞர்கள், ஆய்வாளர்கள் மற்றும் பரிசோதனை மையங்களைக்கொண்ட நிறுவனமாகும். இந்தியாவின் பிரபல நிறுவனங்கள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களைத் தொடர்புகொண்டு அதில் தகுதியானவற்றிற்கு ஹலால் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கையை வெற்றிகரமாகத் தொடங்கியுள்ளோம். பல நாடுகளில் Halal India Pvt. Ltd. வழங்கும் ஹலால் சின்னம் பொறிக்கப்பட்ட பொருட்களை மட்டுமே இந்தியாவிலிருந்த இறக்குமதி செய்ய வேண்டும் என்று உறுதிமொழியையும் பெற்றுள்ளோம்.

எமது சேவைகள் குறித்து விபரங்களைத் தெரிந்து கொள்ளவும் தங்களது மேலான ஆலோசனைகளை வழங்கவும் தொடர்புகொள்க.

**www.halalindia.co.in**
**Contact : 98842 43402**